# விஜயபாரதம்

மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY

பிலவ, ஆனி - 18 வெள்ளி 02.07.2021 மலர் - 2, இதழ் - 87


## சுகாதார நிதி இரட்டிப்பு



விஜயபாரதம்


தேசிய மருத்துவர்கள் தினத்தை முன்னிட்டு, டாக்டர்களுடன் பிரதமர் நரேந்திர மோடி கலந்துரையாடினார். அப்போது அவர், 'கடந்த ஒன்றரை ஆண்டுகளில் டாக்டர்களின் உழைப்பு மிகச்சிறப்பானது. இதற்காக அனைத்து இந்தியர்களின் சார்பில், அனைத்து மருத்துவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய பட்ஜெட்டில் சுகாதாரத்திற்கான நிதி இரட்டிப்பாக்கப்பட்டு உள்ளது. சுகாதார அமைப்புகளை வலுப்படுத்துவதற்காக 50 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு உள்ளது. மருத்துவ துறை நிபுணர்கள், யோகாவை முன்னெடுத்து வருகின்றனர். இன்றைய நவீன மருத்துவ அமைப்புகள் கொரோனாவுக்குப் பிந்தைய பிரச்னைகளை தீர்ப்பதில் யோகா எவ்வாறு உதவுகிறது என்பது குறித்து ஆய்வுகள் நடத்தி வருகின்றன' என பேசினார்.

## சுமந்த் ராமன் கேள்வி

திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரி தமிழ்த்துறை தலைவர் பால் சந்திரமோகன் மீது பட்ட மேற்படிப்பு படிக்கும் பல மாணவிகள் பாலியல் புகார் அளித்தனர். இதையடுத்து அவர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். இது குறித்து பிரபல தமிழ் செய்தித் தொலைக்காட்சி விவாத நிகழ்ச்சி ஒன்றை நடத்தியது. அது கிறிஸ்தவ கல்லூரி என்பதால், வழக்கம்போல கல்லூரியின் பெயர் இருட்டடிப்பு செய்யப்பட்டது. 'இன்னோர் பாலியல் தொல்லை.. மாணவிகள் புகாரை அடுத்து தமிழ்த்துறை பேராசியர் பணியிடை நீக்கம், விசாரணை தீவிரம்..' என்ற வகையில் அந்நிகழ்ச்சியின் தலைப்பு இருந்தது. இந்நிகழ்ச்சியின் தொகுப்பாளர் மகாலிங்கம் பொன்னுசாமி, இதனை தன் டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டார். இதற்கு பதில் அளித்துள்ள பிரபல அரசியல் விமர்சகர் சுமந்த் ராமன், 'PSBBன்னா பெயர் போடுவீங்க, கிறிஸ்தவ பள்ளி, கல்லூரின்னா பெயர் போட மாட்டீங்களா?' என பத்திரிக்கையாளர் மகாலிங்கத்தை கேள்வி கேட்டுள்ளார்.

விஜயபாரதம்



# எய்ம்ஸ்-க்கு தமிழக அரசுதான் பொறுப்பு




விஜயபாரதம்

மதுரையைச் சேர்ந்த புஷ்பவனம் என்பவர், மதுரையில் தற்காலிக இடத்தில் எய்ம்ஸ் மருத்துவமனையை தொடங்க வேண்டும் என உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் மனு ஒன்றை தாக்கல் செய்தார். அதில், 'மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்கப்படும் என மத்திய அரசு 2018ல் அறிவித்தது. ஆனால், தற்போது வரை அதற்கான கட்டுமானப் பணிகள் நடைபெறவில்லை. மதுரையுடன் அறிவிக்கப்பட்ட உத்திர பிரதேசம், ஆந்திர பிரதேசம், மகாராஷ்டிரா, பஞ்சாப், மேற்கு வங்காளம், தெலுங்கான உள்ளிட்ட 16 மாநிலங்களில் எய்ம்ஸ் மருத்துவமனை கட்டும் பணிகள் நடைபெறுவதுடன், வெளிப்புற நோயாளிகள் பிரிவும் தொடங்கப்பட்டுள்ளது. அசாம், குஜராத், ஜம்மு காஷ்மீர்,ஜார்கண்ட், இமாச்சலபிரதேசம் போன்ற மாநிலங்களில் எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுமானம் நடைபெற்று வரும் நிலையில், எம்.பி.பி.எஸ் மாணவர் சேர்க்கையும் தொடங்கப்பட்டுள்ளது. எனவே, மதுரையில் தற்காலிக இடத்தில் எய்ம்ஸ் மருத்துவமனையை தொடங்க உத்தரவிட வேண்டும்',என்று தெரிவித்தார். இதற்கு பதிலளித்துள்ள மத்திய அரசு, 'தமிழக அரசு தரப்பில் இது தொடர்பாக எந்தவொரு கோரிக்கையும் முன்வைக்கப்படவில்லை. வெளிநோயாளிகள் பிரிவு மற்றும் முதலாமாண்டு எம்.பி.பி.எஸ் மாணவர் சேர்க்கையும் தொடங்கத் தயார்.ஆனால்,அதற்கு சரியான இடத்தை தமிழக அரசு வழங்கினால் உடனே பணிகள் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்' என்று அறிக்கை தாக்கல் செய்துள்ளது.

# பிரியாணி கடையை தாக்கிய காங்கிரஸ் பிரமுகர்



விஜயபாரதம்

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் ரயில் நிலையம் அருகே உள்ள ஒரு பிரியாணி கடையில், அதே பகுதியைச் சேர்ந்த காங்கிரஸ் பிரமுகர் பிரபு, அவரது நண்பர் தயாளன் ஆகியோர் சாப்பிட சென்றுள்ளனர். சிக்கன் சேமியா ஃபிரை மாலையில் தான் கிடைக்கும் என்பது தெரிந்திருந்தும், அது எங்களுக்கு இப்போதே வேண்டும் என அடம் பிடித்ததுடன் கடை உரிமையாளர் முகமது சாலிக், கடை ஊழியர்கள் மீது தாக்குதல் நடத்தியதுடன் கடையையும் அடித்து நொறுக்கினர். இச்சம்பவத்தில் படுகாயமடைந்த கடை உரிமையாளர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். வழக்கமாக உணவகங்களில் புகுந்து தாக்குதல் நடத்துவதில் பெயர் பெற்ற தங்கள் கூட்டணியின் தலைமை கட்சியினரை தற்போது காங்கிரசார் பின்பற்றுகின்றனர் என அங்குள்ள மக்கள் பேசிவருகின்றனர்.

# சிக்னல் மீறினால் தானியங்கி அபராதம்



விஜயபாரதம்

சாலை சிக்னல்களில் விதிமீறல் நடப்பது சகஜமாக உள்ளது. விதி மீறும் அனைத்து வாகன ஓட்டிகளுக்கும் போக்குவரத்து காவலர்களால் அபராதம் விதிக்க முடிவதில்லை. இதற்காக புதிய தொழில்நுட்பத்தை சென்னை காவல்துறை அறிமுகப்படுத்தியுள்ளது. சென்னையில் ஐந்து முக்கிய சிக்னல் பகுதிகளில், சிக்னல்களில் சாலை விதிகளை மீறும் வாகன ஓட்டிகளை சிசிடிவி கேமராக்கள் மூலம் அடையாளம் கண்டு, வாகன உரிமையாளர்களின் செல்போனுக்கு அபராத ரசீது அனுப்பப்படும் முறை துவங்கப்பட்டுள்ளது. இதனை அனைத்துப் பகுதிகளிலும் விரிவுபடுத்தினால் போக்குவரத்து விதிமீறல், விபத்துகள், லஞ்சம் என அனைத்தும் பெருமளவு குறையும்.

# இதயம் அறக்கட்டளைக்கு சீல்

மதுரை ஆயுதப்படை மைதானத்தில் இயங்கி வந்த இதயம் அறக்கட்டளை காப்பகத்தில் இருந்த ஐஸ்வர்யா என்ற பெண்ணின், 1 வயது ஆண் குழந்தை ஜூன் 28ம் தேதி கொரோனாவால் உயிரிழந்ததாக கூறப்பட்ட விவகாரத்தில், போலியான ஆவணங்களை பயன்படுத்தி நாடகமாடியது கண்டுபிடிக்கப்பட்டது. இதனால், காப்பகத்தில் இருந்த அனைவரையும் வேறு காப்பகங்களுக்கு மாற்றும்போது, கர்நாடக மாநிலத்தை சேர்ந்த பெண்ணின் 2 வயது பெண் குழந்தையும் காணாமல் போனது தெரிய வந்தது. காப்பக பணியாளர்களிடம் தல்லாகுளம் காவல்துறையினர் நடத்திய விசாரணையில், மதுரை நகைக்கடை உரிமையாளர் கண்ணன் என்பவருக்கு ஜூன் 13ல் 1 வயது ஆண் குழந்தை விற்கப்பட்டதும், 2 வயது பெண் குழந்தை கடந்த 16ம் தேதி அன்று, கல்மேடு பகுதியை சேர்ந்த ரகுபர் சாதிக் என்பவருக்கு விற்கப்பட்டதும் தெரியவந்தது. இதனையடுத்து, இரு குழந்தைகளையும் பத்திரமாக மீட்டு, குழந்தைகளை விலைக்கு வாங்கிய நபர்களை காவல்துறையினர் கைது செய்தனர். பின், பெற்றோர்கள் முன்னிலையில் மாவட்ட குழந்தைகள் நல அமைப்பினர் குழந்தைகளை சிகிச்சைக்காக அரசு மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர். இதயம் அறக்கட்டளைக்கு சீல் வைக்கப்பட்டது. தலைமறைவாக உள்ள அறக்கட்டளை நிர்வாகி சிவக்குமார் உள்ளிட்டோரை காவல்துறையினர் தேடி வருகின்றனர்.

விஜயபாரதம்



## பொன்னூரில் கிடைத்த சிவலிங்கம்




விஜயபாரதம்

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி அருகேயுள்ள பொன்னூர் கிராமத்தில் நெற்களம் அமைக்கப்பட உள்ளது. இதற்காக, தேர்வு செய்யப்பட்ட இடத்தில் பள்ளம் தோண்டும் பணி நடைபெற்றது. அப்போது, மண்ணில் சுமார் மூன்றரை அடி உயரமுள்ள சிவலிங்கம் கண்டெடுக்கப்பட்டது. ஆனால் அதில் பீடம் எதுவும் கிடைக்கவில்லை. இத்தகவலை அடுத்து பொன்னூர் கிராம மக்கள் சிலையை வழிபட்டு சென்றனர். ஊராட்சி மன்றத் தலைவர், ஒன்றிய கவுன்சிலர் இந்த தகவலை வந்தவாசி வட்டாட்சியருக்கு தெரிவித்தனர். அங்கு வந்த வட்டாட்சியர், திருவண்ணாமலை அரசு அருங்காட்சியகத்துக்கு சிலையை கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார். இதற்கு கிராம மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். மேலும், சிலையை அருகே உள்ள சாந்தநாயகி உடனுறை திருக்காமேஸ்வரர் கோயில் அருகே வைத்து வழிபட ஏற்பாடு செய்துள்ளனர்.

---

## மலிவு விலை 2-டிஜி முயற்சி




விஜயபாரதம்

அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி கவுன்சிலின் (சி.எஸ்.ஐ.ஆர்) ஒரு தொகுதி ஆய்வகமான ஹைதராபாத்தில் உள்ள இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் கெமிக்கல் டெக்னாலஜி (ஐ.ஐ.சி.டி) மற்றும் நோவ் லேப்ஸ் ஆகியவை இணைந்து கொரோனா எதிர்ப்பு மருந்தான 2டியோக்ஸி டிகுளுக்கோஸ் (2 டிஜி) மருந்தை மலிவு விலையில் மக்களுக்கு அளிக்கும் வகையில் தயாரிக்க ஒரு ஒப்பந்தம் கையெழுத்தானது. டாக்டர் ரெட்டீஸ் லெபாரட்டரீஸ் நிறுவனத்துடன் இணைந்து பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் (டி.ஆர்.டி.ஓ) துணை அமைப்பான அணு மருத்துவம் மற்றும் அதனுடன் தொடர்புடைய அறிவியல் நிறுவனம் (இன்மாஸ்) 2டி.ஜி இந்த 2 டிஜி மருந்தஉருவாக்கியது குறிப்பிடத்தக்கது. இதற்கான இந்திய மருந்துகள் கட்டுப்பாட்டு ஜெனரலில் (டி.சி.ஜி.ஐ) அனுமதியை பெற்ற பிறகு நோஷ் லேப்ஸ் நிறுவனம், 2டி.ஜி மருந்துகளை தயாரிக்கத் தொடங்கும் என கூறப்பட்டுள்ளது.

---

## உ.பி. அரசை பாராட்டிய உச்ச நீதிமன்றம்

கொரோனா தொற்றுநோய் காலத்தில், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் தங்கள் சொந்த மாநிலங்களுக்கு திரும்ப வரும்போது ஏற்படும் இடர்பாடுகள், அங்கு அவர்களின் வாழ்வாதாரம் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளை பல மாநில அரசுகள் சரிவர கையாளவில்லை. ஆனால், இதனை ஒரு தனி இணையதளப் பதிவு, நிவாரண ஆணையர், உணவு பொருட்கள் வழங்கல், மறுவாழ்வு, தொழில் மேம்பாடு, கடனுதவி என மிக சிறப்பாக உத்தர பிரதேச அரசு கையாண்டது. உ.பி. அரசு, இது குறித்த ஒரு விரிவான பிரமாணப் பத்திரத்தை உச்ச நீதிமன்றத்தில் சமர்ப்பித்தது, இதனை பரிசீலித்த உச்ச நீதிமன்றம், யோகி ஆதித்தியநாத் தலைமையிலான உ.பி அரசை வெகுவாக பாராட்டியுள்ளது.

விஜயபாரதம்



# கொரோனா சிகிச்சையில் அதிமதுரம்

மத்திய அரசின் பயோடெக்னாலஜி துறையின் (டி.பி.டி) தேசிய மூளை ஆராய்ச்சி மையத்தின் (என்.பி.ஆர்.சி) விஞ்ஞானிகள் குழு, நமது சித்தா, ஆயுர்வேத மருத்துவ முறைகளில் பரவலாக சளி, இருமல், நாள்பட்ட காய்ச்சல் ஆகியவைகளுக்கு பயன்படுத்தும் 'அதிமதுரம்' என்ற மருந்து, கொரோனா சிகிச்சைக்கு ஒரு சிறந்த மருந்தாக பயன்படும் என ஆய்வு செய்து கண்டறிந்துள்ளது.

கொரோனா வைரஸ், மனித உயிரணுக்களை பாதிக்கும்போது, உடலின் நோயெதிர்ப்பு அமைப்பு சைட்டோகைன்கள் எனப்படும் புரதங்களின் தொகுப்பை வெளியிடும். சில நேரங்களில் இது கட்டுப்பாடற்றதாக மாறும், இது கடுமையான வீக்கம், நுரையீரல் திசுக்களில் திரவம் சேர்தலுக்கு வழி வகுக்கும். இதனால், கடுமையான சுவாசக் கோளாறு, செல்கள் இழப்பு, உறுப்பு செயலிழப்பு போன்றவை ஏற்படும். அதிமதுரத்தில் உள்ள கிளைசிரைசின் மூலக்கூறுகள் இந்த சிக்கலைத் தவிர்க்க உதவும் என்று NBRC விஞ்ஞானிகள் கண்டறிந்தனர். மேலும், இந்த கிளைசிரைசின் வைரஸ் நகலெடுப்பையும் 90 சதவீதம் வரை குறைப்பதையும் அவர்கள் கண்டறிந்தனர்.



விஜயபாரதம்

# கேரளாவில் இருந்து வெளியேறும் கிட்டெக்ஸ்

உலகின் இரண்டாவது பெரிய குழந்தைகள் ஆடை உற்பத்தியாளர் கிட்டெக்ஸ் குழுமம், கேரளாவில் 3,500 கோடி ரூபாய் மதிப்பில் 20 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பை வழங்கும் விதத்தில் ஒரு ஆயத்த ஆடைப் பூங்காவை நிறுவ முயற்சிகளை மேற்கொண்டது. 2020 ஜனவரியில் கொச்சியில் நடைபெற்ற 'அசென்ட் குளோபல் முதலீட்டாளர்கள் சந்திப்பில்' கேரள அரசுடன் இந்த திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. 30 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டது. அது தற்போது கைவிடப்பட்டுள்ளது. இது குறித்து பேசிய இக்குழுமத்தின் தலைவரும் நிர்வாக இயக்குநருமான சாபு எம் ஜேக்கப், கேரள அரசு மற்ற மாநிலங்களை போல எந்த சலுகையும் வழங்கவில்லை என்றாலும் அங்கு தொழில் துவங்க முயன்றேன்.ஆனால், அதிகாரிகளின் தொடர் தொல்லையால் இத்திட்டம் கைவிடப்படும் சூழல் ஏற்பட்டுள்ளது. கேரளாவில் யார் முதலீடு செய்தாலும் மன அமைதியை இழந்து தற்கொலைக்கு தள்ளப்படுவார்கள். இந்நிலை தொடர்ந்தால் கேரளாவில் தொழில்கள் மயானமாகும் என தெரிவித்துள்ளார். இந்த அறிவிப்பால் பங்கு சந்தையில், இந்த நிறுவனப் பங்குகளின் விலை 10 சதவீதம் குறைந்தது.

விஜயபாரதம்







# எஸ்.டி.பி.ஐ. தலைவர் கைது

காங்கிரசை சேர்ந்த பட்டியலின எம்.எல்.ஏ. ஆர்.அகண்ட சீனிவாச மூர்த்தியின் மருமகனின் சர்ச்சைக்குரிய முகநூல் பதிவையடுத்து கடந்த 2020 ஆகஸ்ட் 11 அன்று நள்ளிரவு பெங்களூருவில் முஸ்லிம் மதவெறி கும்பல் வன்முறையில் ஈடுபட்டது. இதில், கலவரத்தில் நான்கு பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 60 காவல்துறையினர் காயமடைந்தனர். இரண்டு காவல் நிலையங்கள், சீனிவாச மூர்த்தியின் வீடு, காவல்துறை வாகனங்கள் உட்பட ஏராளமான அரசு, தனியார் வாகனங்கள் எரித்து தீக்கிரையாக்கப்பட்டன. பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா (பி.எப்.ஐ) அமைப்பும் அதன் அரசியல் முகமான எஸ்.டி.பி.ஐ கட்சியும் இந்த அராஜகத்தில் ஈடுபட்டன. என்.ஐ.ஏ விசாரணையில், முன்னாள் மேயரும் காங்கிரஸ் தலைவருமான சம்பத் ராஜ், கார்ப்பரேட்டர் ராகிப் ஜாகிர், எஸ்.டி.பி.ஐ மற்றும் பி.எப்.ஐ தலைவர்கள் 17 பேர் உட்பட கலவரத்தில் ஈடுபட்ட 138 பேர் கைது செய்யப்பட்டனர். 43 இடங்களில் சோதனை நடத்தப்பட்டது. இக்கலவரத்தில் 293 பேர் முக்கிய பங்காற்றியுள்ளனர் என தெரியவந்துள்ளது. தற்போது இவ்வழக்கில் முக்கிய சதிகாரரான எஸ்.டி.பி.ஐ தலைவர் சையத் அப்பாஸை என்.ஐ.ஏ கைது செய்துள்ளது.

விஜயபாரதம்



# காங்கிரஸ் அதற்கு சரிபட்டு வராது



விஜயபாரதம்

பஞ்சாப், ஹரியானா, கர்நாடகா, அசாம் உள்ளிட்ட மாநிலங்களில் சமூக ஊடக பிரச்சாரத்தை மேற்கொள்ள கங்கிரஸ் பணியமர்த்திய பிரச்சார நிறுவனம் 'டிசைன் பாக்ஸ்'. இதன் இணை இயக்குனர் குஞ்சீத் கவுர், பேசிய வீடியோ ஒன்று தற்போது வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அதில், அவர் 'காங்கிரஸ் ஒருபோதும் பா.ஜ.கவை வெல்ல முடியாது. அவர்கள் மக்களுடன் சிறிதும் தொடர்பில் இல்லை. பா.ஜ.கவுடன் மோத காங்கிரசுக்கு முன் தயாரிப்புகள் ஏதுமில்லை. பின் எப்படி அவர்களால் வெல்ல முடியும்' என பேசியுள்ளார். இது தற்போது இணையத்தில் பலராலும் பகிரப்பட்டும் கிண்டல் செய்யப்பட்டும் வருகிறது.

# புத்தகம் வெளியீடு

இலங்கையை சேர்ந்த 'நாவலர் இந்து பண்பாட்டுப் பேரவை பேரவை' அமைப்பு, ஆறுமுக நாவலர் 1854ம் வருடம் இயற்றிய புகழ்பெற்ற 'சைவதூஷண பரிகாரம்' என்ற நூலின் மறுபதிப்பினை இணைய வழியாக வெளியிடுகிறது. இதனை https://www.youtube.com/c/olikeetru என்ற இணைய முகவரியில் வரும் 04.07.2021 ஞாயிறு அன்று மாலை 6:00 மணி முதல் 7:30 மணிவரை நேரலையில் காணலாம்.



விஜயபாரதம்

# மேற்கு வங்கம் எஸ்.ஐ.டி. அமைக்க கோரிக்கை

மே 2, 2021 முதல் மேற்கு வங்கத்தில் நிகழ்ந்த தேர்தலுக்கு பின்பாக பல்வேறு வன்முறைகள் நடைபெற்றன. இந்த வன்முறைகள் குறித்து விசாரிக்க நீதிமன்றத்தின் மேற்பார்வையில் ஒரு சிறப்பு விசாரனைக் குழு (எஸ்.ஐ.டி) அமைக்க வேண்டும் என நீதிக்கான ஹிந்து முன்னணி என்ற அமைப்பின் சார்பில் ரஞ்சனா அக்னிஹோத்ரி, ஜிதேந்திர சிங் ஆகியோர் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். இதனை விசாரித்த நீதிபதி வினீத் சரண் தலைமையிலான பெஞ்ச், இது குறித்து பதில் அளிக்க மத்திய அரசு, திருணமூல் காங்கிரஸ் தலைமையிலான மேற்கு வங்க அரசு , இந்திய தேர்தல் ஆணையம் ஆகியவற்றிற்கு நோட்டீஸ் அனுப்பியது.

விஜயபாரதம்





# தங்கம் கடத்தும் கம்யூனிச தலைவர்கள்

கேரள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தலைவரும், கட்சியின் சமூக ஊடக பிரிவு உறுப்பினருமான அர்ஜுன் அயான்கி, துபாயில் இருந்து கோழிக்கோடுக்கு 2.23 கிலோ தங்கம் கடத்திய வழக்கில் சுங்கத் துறையால் கைது செய்யப்பட்டார். முன்னதாக, கடந்த ஜூன் 21ம் தேதி, கோழிக்கோடு கரிபூர் விமான நிலையத்தில் முகமது ஷபீக் மெலதில் என்பவர்தான் இந்த தங்கத்தை கடத்தினார். அதனை சுங்க அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். அதே நாளில், கோழிக்கோடு மாவட்டம் ராமநட்டுக்கராவில் சாலை விபத்தில் ஐந்து பேர் உயிரிழந்தனர். இது குறித்து விசாரித்தபோது, இறந்த அந்த ஐந்து இளைஞர்களும் முகமது ஷபீக், அந்த தங்கத்தை ஏமாற்றி எடுத்து சென்றதாகக் கருதி, ஒரு காரை துரத்தியபோது விபத்து ஏற்பட்டது தெரியவந்தது. இந்த தங்கத்தை ஷபீக்கிடம் இருந்து பெறவே, அர்ஜுன் கோழிக்கோடு விமான நிலையத்திற்குச் சென்றுள்ளார். அர்ஜுன் பயன்படுத்திய கார், டி.ஒய்.எப்.ஐ தலைவர் சி. சஜேஷுக்கு சொந்தமானது. அவர் சி.பி.ஐ (எம்) கட்டுப்பாட்டில் உள்ள கூட்டுறவு வங்கியில் தங்க மதிப்பீட்டாளராக உள்ளார். இதில் மற்றொரு கம்யூனிச தலைவரான ஸ்ரீஜேஷ் தாஸின் பங்கு குறித்தும் விசாரிக்கப்படுகிறது. விசாரணையில், சி.பி.ஐ (எம்) தலைவர்கள் ஒருவர் பி ஒருவராக சிக்குவது அக்கட்சிக்கும், கேரள முதல்வர் பினராயி விஜயனுக்கு பெரும் சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது.

விஜயபாரதம்




# அர்ச்சகரை மிரட்டிய அதிகாரி

கர்நாடக மாநிலம் தங்கவயல் தாலுகாவுக்கு உட்பட்ட குட்டஹள்ளியில் பங்காரு திருப்பதி எனும் பிரசன்ன வெங்கடரமண சுவாமி கோயில் உள்ளது. கர்நாடக ஹிந்து அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் இருக்கும் இக்கோயில் திருப்பதி ஏழுமலையான் கோவிலுக்கு இணையாகக் கருதப்படுகிறது. இக்கோயிலில் செயல் அதிகாரியான சுப்பிரமணியன் என்பவர், கோயிலில் பணியாற்றும் அர்ச்சகர் லக்ஷ்மி நாராயணன் என்பவரை கழிவறையை சுத்தம் செய்யுமாறு வற்புறுத்தியுள்ளார். அவ்வாறு கழிவறையை சுத்தம் செய்தால்தான், கோயிலில் இனி வேலை செய்ய முடியும் இல்லையெனில் வேலையும் கிடையாது சம்பளமும் கிடையாது என்று அச்சுறுத்தியுள்ளார். இதனையடுத்து, அக்கோயிலில் பணிபுரியும் அர்ச்சகர்கள் அனைவரும் துன்புறுத்தப்பட்டு வருவதாக தாலுகா வர்த்தகர்கள் சங்கம் புகைப்பட ஆதாரத்துடன் கர்நாடக அரசுக்கு புகார் ஒன்றை அளித்துள்ளது. 'இந்த சம்பவம் தொடர்பாக உரிய விசாரணை நடத்தி பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் வழங்க வேண்டும்' என்று ஹிந்து அறநிலையத்துறை ஆணையரிடம் வலியுறுத்தி உள்ளதாக அர்ச்சகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

விஜயபாரதம்






# மேட் இன் சைனா - புலம்பும் பாகிஸ்தான்

பாரதம் ஏற்படுத்திவரும் வலுவான வான் பாதுகாப்பு திறன்களுக்கு பதிலளிக்கும் விதமாக, இந்த ஆண்டு மார்ச் 12ம் தேதி, பாகிஸ்தான் சீனா தயாரித்த குறைந்த, நடுத்தர உயர விமான பாதுகாப்பு அமைப்பு (LOMADS) LY 80 ஐ அறிமுகப்படுத்தியது. ஆனால், சோதனையில் தரம் குறைந்த இந்த சீன தயாரிப்பு ஏவுகணைகள் சரியாக வேலை செய்யவில்லை என்று தெரியவந்துள்ளது. தற்போது மூன்று இடங்களில் இவை அமைக்கப்பட்டுள்ளன. இதுபோன்ற மேலும் ஆறு அமைப்புகளை நிறுவ சீனாவுடன் பாகிஸ்தான் ஒப்பந்தம் போட்டுள்ளது. தற்போது, இந்த கோளாறுகளை சரிசெய்ய, சீன தொழில்நுட்ப வல்லுநர்கள் கடந்த இரண்டு மாதங்களாக பாகிஸ்தானில் தங்கி உள்ளனர்.

விஜயபாரதம்





விஜயபாரதம்

# பாரதத்திற்கு புகழாரம்

லண்டனில், பருவநிலை நடவடிக்கைகள் குறித்து இந்திய சர்வதேச மன்றம் ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கில் பிரிட்டன் இளவரசர் சார்லஸ் கலந்துகொண்டார் அப்போது அவர், 'பருவநிலை நடவடிக்கைகளில் பாரதத்தின் உலகளாவிய அணுகுமுறை, வலுவான தனியார் துறைகளுடன் எங்கள் முயற்சிகளை மேலும் விரைவுபடுத்துவதற்கும், நிலையான எதிர்காலத்தை உருவாக்குவதற்கும் உதவும் என நம்புகிறேன். மாற்றத்தை ஆதரிக்க தனியார் மூலதனத்தின் பங்கை அதிகரிப்பதில் நாம் கவனம் செலுத்த வேண்டும். புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறைகளில் குறிப்பாக சூரிய ஆற்றல் துறையில் பாரதம் வேகமாக முன்னேறி வருகிறது. இதில் அவர்கள் எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் உலகுக்கே முன் உதாரணமாக விளங்குகிறது' என பேசினார்.

# பயங்கரவாதம் பரப்பும் பாகிஸ்தான்



விஜயபாரதம்

கடந்த 2020ல், பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான், இஸ்ரேலை "பாகிஸ்தானின் நம்பர் ஒன் எதிரி" என்று பகிரங்கமாக அறிவித்தார். இஸ்ரேலுக்கும் ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கும் இடையிலான உறவுகள் சீராகி வருவதை குறித்து இம்ரான் கான் குறிப்பிடுகையில், மற்ற நாடுகள் என்ன செய்தாலும், பாலஸ்தீனியர்களுக்கு நியாயமான தீர்வு, உரிமைகள் கிடைக்கும்வரை, பாகிஸ்தான் ஒருபோதும் இஸ்ரேலை அங்கீகரிக்காது' என தெரிவித்தார். ஒருவேளை பாகிஸ்தான் இஸ்ரேலை ஏற்றுக்கொண்டால், அது காஷ்மீரை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும், ஏனெனில் அதே நிலை அங்கேயும் பொருந்தும் என்பது அனைவருக்கும் தெரிந்ததே. இன்றும்கூட ஒவ்வொரு ஆண்டும், குறைந்தது ஆயிரம் பாகிஸ்தானியர்கள் காசா மற்றும் மேற்குக் கரையின் பிற பகுதிகளுக்குச் சென்று ஹமாஸ் மற்றும் இஸ்லாமிய ஜிஹாத்தில் இணைகிறார்கள். 1947 முதல், பாகிஸ்தான், பாலஸ்தீனியர்களுக்கு நிதியுதவி, ராணுவ உதவியை நேரடியாகவும் மறைமுகமாகவும் வழங்கி வருகிறது. பாகிஸ்தான் தனது ராணுவ வீரர்களை இஸ்ரேல் பகுதியில் போரிட மாறுவேடத்தில் பாலஸ்தீனத்திற்கு அனுப்பியதும் நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், சர்வதேச உளவுத்துறை தகவல்படி, ஹமாஸ் மற்றும் இஸ்லாமிய ஜிஹாத்தில் சேர்ந்து, இஸ்ரேலுக்கு எதிராகப் போராடுவதற்கு, பல எதிரி நாடுகளின் பாதுகாப்பை சீர்குலைப்பதற்கு ஆயிரக்கணக்கான முன்னாள் வெளிநாட்டு போராளிகளை பாகிஸ்தானிய ஐ.எஸ்.ஐ பயன்படுத்துவதில் ஆர்வமாக உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.


விஜயபாரதம் தேசிய வார இதழ்

சந்தா செலுத்த / புதுப்பிக்க
www.vijayabharatham.org
என்ற இணையதளம் அல்லது
044 - 26420870 என்ற தொலைபேசி
எண்ணில் தொடர்பு கொள்ளவும் .

93613 99006

# வழிக்கு வந்த ஐரோப்பிய ஒன்றியம்

27 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியத்தை சேர்ந்த மக்கள் பயணம் செய்ய 'கிரீன் பாஸ்' திட்டத்தை ஐரோப்பிய ஒன்றியம் ஜூலை 1ம் தேதி முதல் செயல்படுத்தியுள்ளது. இதன்படி, ஐரோப்பிய ஒன்றியம், உறுப்பு நாடுகள் அனுமதியளித்த ஃபைசர், பயோஎன்டெக், மாடர்னா, வேக்ஸ்ஜெர்வியா ஆகிய நான்கு தடுப்பூசிகளைச் செலுத்திய மக்கள் அளிக்கும் கிரீன் பாஸ் மட்டுமே ஏற்கப்படும். பிற நாடுகளைச் சேர்ந்த மக்கள் தடுப்பூசி செலுத்திய சான்றிதழ் வழங்கினாலும், அது ஏற்கப்படமாட்டாது. அவர்கள் கட்டாயத் தனிமைக்கு உட்படுத்துப்படுவார்கள் எனத் தெரிவித்தது. கோவிஷீல்ட் தடுப்பூசிக்கு அனுமதி வழங்குவது தொடர்பாக சீரம் நிறுவனத்தின் தலைவர் ஆதார் பூனாவல்லா, ஐரோப்பிய ஒன்றியத்திடம் அனுமதி கோரியிருந்தார். ஐரோப்பாவில் சுற்றுப்பயணத்தில் உள்ள மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் இது தொடர்பாக ஐரோப்பிய யூனியனின் உயர்மட்ட பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். இந்நிலையில், 'கோவின் தளத்தின் மூலம் இந்தியர்களுக்கு வழங்கப்பட்ட சான்றிதழை ஏற்காமல் இந்தியப் பயணிகளை ஐரோப்பிய நாடுகள் தனிமைப்படுத்தினால், இந்தியாவுக்கு வரும் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்தவர்களையும் அவர்கள் அளிக்கும் தடுப்பூசி சான்றிதழை இந்தியா ஏற்காமல் அவர்களை கட்டாயத் தனிமைப்படுத்தும் நடவடிக்கை எடுக்கப்படும்' என இந்தியா அறிவித்தது. இதனையடுத்து, ஐரோப்பிய ஒன்றியத்தில் இடம்பெற்றுள்ள ஆஸ்திரியா, ஜெர்மனி, ஸ்லோவேனியா, க்ரீஸ், ஐஸ்லாந்து, அயர்லாந்து, ஸ்பெயின், ஸ்விட்சர்லாந்து ஆகிய 7 நாடுகள், இந்தியாவின் கோவிஷீல்டு தடுப்பூசியைப் போட்டுக் கொண்டவர்கள் 14 நாட்கள் தனிமைப்படுத்துதல் இல்லாமல் தங்கள் நாட்டினுள் அனுமதிக்கப்படுவார்கள் எனத் தெரிவித்துள்ளது. மற்ற நாடுகளும் விரைவில் இந்த நிலைப்பாட்டை எடுக்கும் என தெரியவந்துள்ளது.

விஜயபாரதம்



# பறக்கும் தட்டு தினம்



விஜயபாரதம்

பறக்கும் தட்டுகளை Unidentified Flying Object (UFO) எனதான் அனைவரும் குறிப்பிட்டுவோம் ஆனால், அதனை, 'unidentified aerial phenomena' என்றே குறிப்பிட்டிருக்கிறது அமெரிக்காவின் பென்டகன். அதாவது, "UFO குறித்த செய்தி, வீடியோக்களில் அதில் இருப்பது இன்னும்என்னவென்பது தெளிவாக தெரியவில்லை" என்றே பென்டகன் கூறிவருகிறது.

N = R★ • fp • ne • fl • fi • fc • L ... என்பது நாம் வாழும் இந்தப் பால்வெளியில் (Milky way Galaxy) நம்மைப் போலவே வேறு ஒரு நாகரிகம் (ஏலியன்ஸ்) தோன்றியிருக்குமா எனக் கண்டறிவதற்கான ஒரு கணிதச் சமன்பாடு. Drake Equation என அழைக்கப்படும் இது முழுக்க முழுக்க ஒரு சம்பவிக்கக்கூடிய தன்மை கொண்ட ஒன்றாக, ஒரு நிகழ்தகவாக பார்க்கப்படுகிறது.

பால்வெளியில் உள்ள நட்சத்திரங்கள், கோள்கள் பற்றி எந்த துல்லியத் தகவலும் இல்லை என்றாலும் தோராய கணக்கீடு அடிப்படையில், நம் பால்வெளியில் மட்டும் 110 கோடிக்கும் அதிகமாக வேற்று கிரக வாசிகளின் நாகரீகங்கள் வரை தோன்றியிருக்கலாம் என்கிறது இந்தச் சமன்பாடு.

2007, 2017ல் பறக்கும் தட்டு போன்ற மூன்று பொருள்கள் உண்மைதான் என அமெரிக்காவின் பென்டகன் ஆய்வகம் தெரிவித்துள்ளது. அமெரிக்கா, வேற்று கிரகவாசிகளுடன் தொடர்பில் உள்ளது, செவ்வாய் கிரகத்தில் அதற்கான 'பேஸ்' உள்ளது என ஆறு மாதங்களுக்கு முன் ஓய்வு பெற்ற ஒரு இஸ்ரேல் விஞ்ஞானி கூறி பரபரப்பை ஏற்படுத்தினார்.

ஏலியன்கள் என நாம் அழைக்கும் வேற்றுகிரகவாசிகள் பயன்படுத்தும் பறக்கும்தட்டுகளை பலர் பார்த்ததாக கூறுகின்றனர். ஆனால், அவைதான் ஏலியன்களின் வாகனமா? இவற்றில் பெரும்பான்மை நிகழ்வுகள் அமெரிக்காவில் பதிவாகியுள்ளது. ஏன் ஏலியன்கள் அமெரிக்காவை மட்டும் அடிக்கடி சுற்றி வருகின்றன, அப்படி என்ன அவைகளுக்கு அங்கு பிடித்திருக்கிறது? ஏலியன்கள் தரையில் இறங்காமல் ஏன் நம் வான் பகுதிவரை வந்து விட்டு ஏன் அப்படியே சென்றுவிடுகிறார்கள்? ஒருவேளை, ஏலியன்கள் பறக்கும் தட்டு மூலம் நம்மைப் பார்வையிட அடிக்கடி பூமிக்கு வருகிறார்கள் என்றால், தொழில்நுட்பத்திலும், புத்திசாலித்தனத்திலும் நம்மை விடப் பல மடங்கு மேலானவர்களாக அவர்கள் இருக்கக்கூடும் என்றால், அவர்கள் நம்முடன் நட்பு பாராட்ட நினைப்பார்களா அல்லது நம்மை அடிமைப்படுத்த நினைப்பார்களா? என்பது எல்லாம் மில்லியன் டாலர் கேள்வி.

சங்கீதா சரவணகுமார்